# TAMIL NADU HIGHWAY ENGINEERS NEWS

Price Rs. 10/- (Tamil & English Monthly Magazine) தனிப் பிரதி ரூ. 10/-

| ஆண்டு 36 | ஜூலை 2026 | இதழ் 07 |
|---|---|---|
| Volume 36 | JULY 2026 | Issue 07 |


## கண்ணீர் அஞ்சலி



நமது சங்கத்தின் **செயற்குழு உறுப்பினர் பொறிஞர் நெ.ஜாகீர் உசேன், உதவிக் கோட்டப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, முதுகுளத்தூர்** அவர்கள் 21.06.2026 அன்று இயற்கை எய்தினார். அவர்களது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைச் சங்கம் தெரிவித்துக் கொள்கிறது.


**தலைவர்**
வொறிஞர் சே.இராமநாதன், பி.இ.,

**பொதுச் செயலாளர்**
வொறிஞர் ப.வீரமணி, எம்.இ.எம்.பி.எ.,

**பொருளாளர்**
வொறிஞர் சொ.தியாகராஜா, எம்.இ.,

**துணைத்தலைவர்கள்**
பொறிஞர் சோ.பாண்டியன், எம்.இ. எம்.பி.எ.,
வொறிஞர் அ.கிருஷ்ணன், எம்.டெக்.,

**செயலாளர்கள்**
வொறிஞர் ச.ஜோதிபாசு, எம்.டெக்., எம்.பி.ஏ.,
வொறிஞர் ஜி.விஜயராகவன், எம்.டெக்.

**செயற்குழு உறுப்பினர்கள்**
1. பொறிஞர் ப.அசோக்குமார், எம்.டெக்., 2. வொறிஞர் ச.கன்னன், எம்.இ., 3. வொறிஞர் ந.கோட்டை ராவுத்தர், எம்.டெக்.,
4. முனைவர் இரா.செந்தில்ராஜ், எம்.இ., 5. பொறிஞர் சி.நடராஜன், எம்.டெக்., 6. பொறிஞர் ஜ.பிரபு , எம்.இ.,
7. பொறிஞர் ஜெ.பிரேம் ஆனந்த், எம். டெக்., 8. பொறிஞர் ப.பூபாலன், பி.இ., 9. வொறிஞர் சி.சு.முத்துகிருஷ்னன், எம்.இ.,
10. வொறிஞர் ரா.முத்து முருகன், பி.இ., 11. வொறிஞர் கோ.முத்து முனிகுமாரி, எம்.டெக்., எம்.பி.எ.,
12. பொறிஞர் ந.முருகானந்தம், எம்.டெக்., 13. வொறிஞர் க.மோகன்ராஜ், எம்.டெக்., 14. பொறிஞர் ர.ராஜா, எம்.இ.,
15. வொறிஞர் பா.விமல்ராஜ், எம்.டெக்., 16. வொறிஞர் தி.விவேகானந்தன், எம்.இ.,
17. வொறிஞர் நெ.ஜாஹிர் உசேன், எம்.இ., 18. வொறிஞர் க.ஸ்ரீராம், எம்.டெக்.,



**தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்**
35v, தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015
தொ. பே. எண் : 044 - 2230 0190, தொ. அ. எண். 044 - 2230 0190
website : www.tnhighwaysengineers.com, e-mail : atnhe.chn15@gmail.com



13.06.2026 அன்று நமது சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது.



நமது சங்கத்தின் இல்லப் பணியாளர் **திரு.எஸ்.நவீன்குமார்** அவர்கள் திருமணம் 24.06.2026 அன்று திருவண்ணாமலையில் சிறப்பாக நடைபெற்றது. நமது சங்கத்தின் **பொதுச் செயலாளர் பொறிஞர் ப.வீரமணி** மற்றும் பொருளாளர் **பொறிஞர் சொ.தியாகராஜா**ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தினர்




**பொறிஞர் இ.முருகேசன், கண்காணிப்புப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, திருநெல்வேலி** அவர்களின் பணி நிறைவு பாராட்டு விழா திருநெல்வேலியில் சிறப்பாக நடைபெற்றது.

## தலையங்கம்

**அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளுக்கு வணக்கம்!**

நீண்டநாள் கோரிக்கையான துறை மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்திய **மாண்புமிகு அமைச்சர்** அவர்களுக்கும், **முதன்மைச் செயலாளர்** அவர்களுக்கும், **முதன்மை இயக்குநர்** அவர்களுக்கும் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறைப் பொறியாளர்கள் சங்கம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

துறை மறுசீரமைப்பிற்குப் பிறகு, சாலைகள் பராமரிப்புப் பணிகளுடன் புதிய பெரும் திட்டப் பணிகளையும் (Major Projects) ஒரே நேரத்தில் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, இரு வகை பணிகளின் தரத்தையும் முழுமையாக உறுதி செய்து செயல்படுத்துவதில் சிரமம் நிலவுகிறது.

எனவே, பெரும் திட்டப் பணிகளை (Major Projects) மேற்கொள்வதற்காக, மண்டல தலைமைப் பொறியாளர் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் தனித்துவமான சிறப்புக் கோட்டம் (Special Division) ஒன்றை அமைக்குமாறும், அதனுடன் இணைந்து தேவையான தரக்கட்டுப்பாட்டு உட்கோட்டங்களையும் (Quality Control Sub-Divisions) உருவாக்குமாறும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். இதன் மூலம், சாலைகள் பராமரிப்புப் பணிகளும், பெரும் திட்டப் பணிகளும் எவ்வித தொய்வுமின்றி, உயர்தரத்துடன் மற்றும் விரைவாக செயல்படுத்தப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு சங்கம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

உட்கோட்ட எல்லைக்குள் நடைபெறும் பணிகளை உட்கோட்ட எல்லைக்குட்பட்ட உதவிப் பொறியாளர்கள் மற்றும் உதவிக் கோட்டப் பொறியாளர்களை வைத்தே பணிகளை மேற்கொள்ள மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்களை இச்சங்கம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது. இதன் மூலம் களம் சார்ந்த சிக்கல்களை விரைவாக தீர்க்கவும், திட்டங்களை தடையின்றி விரைவில் மேற்கொள்ளவும், பணிகளை நெருக்கமாக கண்காணிக்கவும் உதவும்.

உதவிக் கோட்டப் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் பகுதிகள் குறியீடு செய்யப்பட்ட விதத்தில் பல முரண்பாடுகள் உள்ளன. குறிப்பாக, சில உதவிக் கோட்டங்களில் ஒரு உதவிக் கோட்டப் பொறியாளரின் கட்டுப்பாட்டில் நான்கு உதவிப் பொறியாளர்கள் பணியாற்றுகின்றனர். அதேவேளையில், பெரும்பாலான உதவிக் கோட்டங்களில் ஒரு உதவிக் கோட்டப் பொறியாளரின் கீழ் ஒரே ஒரு உதவிப் பொறியாளர் மட்டுமே உள்ளார். எனவே, நிர்வாகச் சமநிலையையும் பணிச்சுமை சமநிலையையும் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு உதவிக் கோட்டப் பொறியாளரின் கீழும் இரண்டு உதவிப் பொறியாளர்கள் பணியாற்றும் வகையிலும், அதேபோல் தரக்கட்டுப்பாடு உட்கோட்டங்களில் சமநிலை இல்லாமல் மூன்று மற்றும் இரண்டு உதவிப் பொறியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். அதிகபட்சமாக இரண்டு கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உட்கோட்டகளுக்கு ஒரு உதவிப் பொறியாளர் என்ற அளவில் பகுதிகளை மறுசீரமைத்து குறியீடு செய்யுமாறு சங்கம் கேட்டுக் கொள்கிறது.

தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகங்களில் செல்லும்போது கோட்டப் பொறியாளர்கள் தங்களுடன் உதவிக் கோட்டப் பொறியாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்களையும் அழைத்துச் செல்வதால், அவர்கள் களப்பணிகளை உரிய முறையில் கண்காணிக்க இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. இதன் காரணமாக, பணிகளின்

தரத்தில் ஏதேனும் குறைபாடுகள் ஏற்பட்டால், அதற்கான முழுப் பொறுப்பையும் சம்பந்தப்பட்ட பொறியாளர்கள் ஏற்க வேண்டிய நிலை உருவாகிறது.

எனவே, வருங்காலங்களில் இதுபோன்ற நடைமுறைகள் தவிர்க்கப்படும் வகையில், கோட்டப் பொறியாளர்களுக்கு தகுந்த அறிவுரைகளை வழங்கி, களப்பணிகள் எவ்வித பாதிப்பும் இன்றி சிறப்பாக நடைபெற தேவையான நடவடிக்கை எடுக்குமாறு தலைமைப் பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்களைச் சங்கம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

துறை மறுசீரமைப்பில் உருவாக்கப்பட்ட க(ம)ப உட்கோட்டங்களில் கண்காணிப்பாளர் தோற்றுவிக்காமலும் மற்றும் அத்தியாவசிய பணியாளர் பணியிடங்களும் இதுவரை நிரப்பப்படாமல் உள்ளன. இதன் காரணமாக, மறுபணியமர்வின் மூலம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள உட்கோட்டங்களில் பணிபுரியும் உதவிக் கோட்டப் பொறியாளர்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

துறை மறுசீரமைப்பு 15.06.2026 அன்று நடைமுறைப்படுத்தப்பட்டு ஒரு மாதம் மேல் ஆகியும் பல பொறியாளர்கள் தங்கள் சொந்த ஊர்களிலிருந்து வெகு தொலைவில் பணியமர்த்தப்பட்டு குடும்பத்தை பிரிந்து பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். பொதுப் பணியிட மாற்றம் தொடர்பான அரசாணை (G.O.) பெற்று, அதனை விரைவாக செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மேலும், தங்களது அதிகார வரம்பிற்குட்பட்ட காலிப் பணியிடங்களுக்கு தகுதியான பொறியாளர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு விருப்ப பணியிட மாறுதல் மூலம் உரிய பணியமர்த்தல் வழங்கிட அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நெடுஞ்சாலைத்துறையின் அலுவலகங்களில் தட்டச்சர், தொழில்நுட்ப உதவியாளர், வாகன ஓட்டுநர், காவலர் உள்ளிட்ட பணிகளுக்கு தற்காலிக பணியாளர்களை நியமிப்பதற்கு ஏற்கனவே நடைமுறையில் உள்ள விதிமுறைகளைப் பின்பற்றி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அதேபோன்று, சாலை பராமரிப்புப் பணிகளும் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி, பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் மேற்கொள்ளவும் தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு மண்டலத் தலைமைப் பொறியாளர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், அதற்கு தேவையான தகுந்த நிதியினை அரசிடம் பெற்று மண்டல தலைமைப் பொறியாளர்களுக்கு வழங்கிட முதன்மை இயக்குநர் அவர்களை சங்கம் கேட்டுக் கொள்கிறது.

**செயற்குழு உறுப்பினர் பொறிஞர் நெ.ஜாஹிர் உசேன்** அவர்கள், நீண்ட காலமாக சங்கத்தின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்பு உணர்வுடனும் அயராது உழைத்தும் செயலாற்றியவர். அனைவரிடமும் அன்புடனும் இன்முகத்துடனும் பழகும் உயர்ந்த பண்பும், எளிமையான அணுகுமுறையும் கொண்டவர். கடந்த 13.06.2026 அன்று சென்னையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்திலும் கலந்துகொண்டு, சங்கப் பணிகளில் தனது மதிப்புமிக்க பங்களிப்பை வழங்கியிருந்தார்.

அன்னாரின் மறைவு அவரது குடும்பத்தினருக்கு மட்டுமல்லாமல், நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இந்தத் துயரமான நேரத்தில், அன்னாரின் குடும்பத்தினருக்கு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கத்தின் சார்பில் எங்களது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

**நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம் வாழ்க!** **பொறியாளர் ஒற்றுமை ஓங்குக!!**

**நகல்:**

# தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்

'நெடுஞ்சாலைப் பொறியாளர் இல்லம்', 35வி, தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015
தொலைபேசி எண் : 044 - 2230 0190 / 4312 3792
மின்னஞ்சல் : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com
வலைதளம் : www.tnhighwaysengineers.com

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| பொறிஞர் **சே.இராமநாதன்**, பி.இ., | பொறிஞர் **ப.வீரமணி**, எம்.இ., எம்.பி.ஏ., | பொறிஞர் **சொ.தியாகராஜா**, எம்.இ., |
| கைபேசி எண்: 88708 88918 | கைபேசி எண்: 97517 04393 | கைபேசி எண்: 98436 40475 |

கடித எண்.414-1/ 2025, நாள்: 23.06.2026

பெறுநர்

1. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்,
   பொதுப்பணிகள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை,
   (கட்டடம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்),
   தலைமைச் செயலகம்,
   சென்னை-9

2. அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள்,
   நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை,
   புனித ஜார்ஜ் கோட்டை,
   சென்னை -600 009

3. முதன்மை இயக்குநர்,
   நெடுஞ்சாலைத்துறை,
   சென்னை - 25

ஐயா,

பொருள் : நெடுஞ்சாலைத்துறை - களப்பணிகள் மேற்கொள்ளும் அனைத்து உட்கோட்டங்களுக்கும் - ஈப்பு வாகனம் வழங்குதல் - தொடர்பாக

வணக்கம்!

சங்கத்தின் நீண்டநாள் கோரிக்கையான துறை மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்திய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், துறை முதன்மைச் செயலாளர் அவர்களுக்கும், முதன்மை இயக்குநர் அவர்களுக்கும் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறைப் பொறியாளர்கள் சங்கத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நெடுஞ்சாலைத்துறையில் தற்பொழுது கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, தரக்கட்டுப்பாடு, தேசிய நெடுஞ்சாலைகள் போன்ற அலகில் உள்ள ஒரு சில உட்கோட்டங்களில் களப்பணி மேற்கொள்வதற்கு ஈப்பு வாகன வசதிகள் இருக்கின்றன. குறிப்பாக சில உட்கோட்டங்களிலும் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட உட்கோட்டங்களிலும் ஈப்பு வாகனங்கள் இல்லை என்பதை

தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், சாலை பாதுகாப்பு அலகு மற்றும் பாலங்கள் ஆய்வு அலகு போன்ற அலகுகளில் தலா அதிகபட்சமாக ஆறு மாவட்டங்களில் வரை ஒரு உட்கோட்டம் இருப்பதால் அவர்கள் பேருந்தில் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆய்வுக் கூட்டடங்கள் மற்றும் களப்பணிகள் குறித்த நேரத்தில் பணிகளை ஆய்வு செய்ய இயலவில்லை. இதனால் பொறியாளர்கள் துரித நேரத்தில் பணிகளை முடித்து விட்டு தலைமையிடம் திரும்ப மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வேளாண்மைத் துறை போன்ற துறைகளில் அனைத்து உட்கோட்டங்களுக்கு ஈப்பு வாகனம் வசதி உள்ளது. அதே போல் நெடுஞ்சாலைத்துறையில் அனைத்து உட்கோட்டங்களில் ஈப்பு வாகனம் வழங்கிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையச் சாலையில் களப்பணிகள் மேற்கொள்ள தனியார் வாகனங்களில் பயணம் செய்வதால் சுங்கச் சாவடியில் சுங்க வரி செலுத்த வேண்டிய நிலை உள்ளது. இதனால் கூடுதல் நிதிச்சுமை பொறியாளர்களுக்கு ஏற்படுகிறது.

தற்பொழுது உள்ள ஈப்பு வாகனங்கள் 16 ஆண்டுகளுக்கு மேல் ஆன ஈப்பு வாகனங்கள் ஆய்வு பணிக்கு செல்லும்போது அடிக்கடி பழுதாகிவிடுகிறது. ஆகையால் பழைய ஈப்பு வாகனங்கள் திரும்ப பெற்று புதிய ஈப்பு வாகனங்கள் வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும், திட்டப் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் செலவினங்கள் போக மீதமுள்ள தொகையை அரசின் அனுமதி பெற்று புதிய ஈப்பு வாகனங்கள் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஆகையால், களப்பணிகளை மேற்கொள்ளும் அனைத்து உட்கோட்டங்களுக்கும் வாகன வசதி ஏற்படுத்தி பொறியாளர்களின் சிரமங்களை போக்கிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,

பொதுச் செயலாளர்

Copy of:

# Association of Tamil Nadu Highway Engineers


**Recognised in G.O Ms. No. 1814 Public (Services) Dept., Dated 21.05.1956**
**'Highway Engineers Home', 35v, Taluk Office Road, Saidapet, Chennai - 600 015**
Phone : 044 - 2230 0190 / 4312 3792, Email : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com
www.tnhighwaysengineers.com

| President | General Secretary | Treasurer |
|---|---|---|
| **Er.S.RAMANATHAN,** B.E., | **Er.P.VEERAMANI,** M.E., M.B.A., | **Er.S.THIYAGARAJA,** M.E., |
| Mobile No.: 88708 88918 | Mobile No.: 97517 04393 | Mobile No.: 98436 40475 |


**Letter No. 437/2026** **Date: 23.06.2026**

**To**

1. **The Principal Secretary to Government,**
   **Highways and Minor Ports Department,**
   **Secretariat,**
   **Chennai – 600 009.**

2. **The Director General,**
   **Highways Department,**
   **Guindy,**
   **Chennai - 25**

**Respected Sir,**

**Sub : Highways Department – All Engineering Posts and Vacancies – General Transfers and Request Transfers for the year 2026-27 – Request for issuance of orders – Regarding.**

**Ref :**
1. **G.O. Ms. No. 10, Personnel and Administrative Reforms Department (Per-S), dated 07.01.1994.**
2. **Letter No. 23847/S/98-1, Personnel and Administrative Reforms Department (Per-S), dated 05.08.1998.**

On behalf of the Tamil Nadu Highways Engineers' Association, we express our sincere gratitude to the **Hon'ble Minister**, the **Principal Secretary to Government**, and the **Director General** for implementing the long-pending departmental reorganization, which has been one of the Association's longstanding demands.

We respectfully submit that approximately 1,600 engineers are presently serving in the seven wings of the Highways Department. Traditionally, general transfers among Assistant Engineers, Assistant Divisional Engineers, Divisional Engineers, Superintending Engineers, and Chief Engineers have been carried out during the months of April and May every year. However, despite the completion of May, transfer orders have not yet been issued.

It is further submitted that no general transfer counseling has been conducted for engineers in the Highways Department since 2017. As a result, contrary to the objectives of the Government's transfer policy, many engineers have continued to serve in the same station for more than eight years.

Further, engineers seeking request transfers to vacant posts on personal grounds are facing considerable procedural difficulties in obtaining favorable orders, causing significant hardship and mental stress. Therefore, we request that vacant posts may kindly be filled on a priority basis through a transparent seniority-based register of transfer applications.

As per Government norms, general transfers should have been completed on or before 31.05.2026. Timely implementation is particularly important for women engineers to enable them to make necessary arrangements such as relocation of residence and admission of their children in schools at their new stations. Since the prescribed time limit has already expired, we request that the Government may issue suitable orders extending the time limit for conducting general transfers.

We further submit that, due to the departmental reorganization implemented on 15.06.2026, a large number of engineers and officials have been posted far away from their native places. Consequently, many employees are compelled to work at distant stations away from their families, resulting in considerable hardship, mental stress, and disruption to their family life.

In view of the above, we request that the cases of affected employees may kindly be considered on humanitarian grounds and that appropriate transfer orders may be issued to alleviate their genuine difficulties.

Considering all the above circumstances, we request that request transfers may be granted without delay and that **Government Orders relating to general transfers** may be issued at the earliest.

We firmly believe that under the good clean governance of the **Hon'ble Chief Minister** of Tamil Nadu, prompt and equitable action will be taken in matters relating to transfers. We therefore request your good office to **issue suitable instructions to the Director General** for the early issuance of general transfer and request transfer orders.

Thanking you,

Yours faithfully,

General Secretary

Copy of:

# Association of Tamil Nadu Highway Engineers

Recognised in G.O Ms. No. 1814 Public (Services) Dept., Dated 21.05.1956
'Highway Engineers Home', 35v, Taluk Office Road, Saidapet, Chennai - 600 015
Phone : 044 - 2230 0190 / 4312 3792, Email : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com
www.tnhighwaysengineers.com

| President | General Secretary | Treasurer |
|---|---|---|
| **Er.S.RAMANATHAN,** B.E., | **Er.P.VEERAMANI,** M.E., M.B.A., | **Er.S.THIYAGARAJA,** M.E., |
| Mobile No.: 88708 88918 | Mobile No.: 97517 04393 | Mobile No.: 98436 40475 |


**Letter No.440- 1/ATNHE/ 2026** **dated 23.06.2026**

**To**

**The Principal Secretary to Government,**
**Human Resources Management Department,**
**Secretariat,**
**Chennai – 600 009**

**Respected Sir,**

**Sub: Highways Department – Request for relaxation of the 10 years regular service of G.O. Ms. No. 68, Personnel and Administrative Reforms Department, dated 23.01.1985 - – Regarding.**

**Ref:**

1. **G.O.Ms.No.68, Personnel and Administrative Reforms(per-M), Department, dated 23.01.1985**
2. **Letter No.1410/Confiditional -1/2026, dated 02.06.2026 the Director General, Highways Department**

The Assistant Engineers who were recruited through the Tamil Nadu Public Service Commission in 1998 and subsequently promoted as Assistant Divisional Engineers after 2007 have been serving in the promotional post for more than 18 years. However, their services in the post have not been regularised to date.

Further, even after completion of 10 years of service in the post of Assistant Divisional Engineer, the Selection Grade due to them has not been granted. Although several representations and requests have been submitted in this regard, no appropriate action has been taken and the matter continues to remain pending.

Pay fixation was carried out based on the recommendations of the Sixth Pay Commission, and the officers have been drawing pay accordingly. However, on the grounds that certain court cases are pending, the benefits of the Seventh Pay Commission have not been extended to them. This has caused considerable mental stress and dissatisfaction among the affected engineers.

Moreover, many of these engineers have either reached or are nearing the age of superannuation. The non-grant of Selection Grade, corresponding pay revision, and the monetary benefits due to them within the appropriate time frame has caused significant hardship and financial loss.

As per G.O. Ms. No. 68, dated 23.01.1985, the period of ten years in a post is reckoned from the date of regular appointment, excluding periods of reversion. Leave, other than Extraordinary Leave without allowance and without a medical certificate, shall be counted for completing the 10/20 years qualifying service.

In the case of the Assistant Divisional Engineer post, the appointment is through promotion and not by direct recruitment. Therefore, it is requested that relaxation of the provisions of G.O. Ms. No. 68, dated 23.01.1985, may kindly be considered and granted in this case.

We therefore request your kind intervention and favourable action in this matter.

Thanking you,

Yours faithfully,

General Secretary

---

**தலைமைப் பொறியாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள கீழ்க்காணும் பொறியாளரைச் சங்கம் வாழ்த்துகிறது!**

**(அரசாணை (ப) எண்.64, நெ.ம.சி.து (எச்.கே.1) துறை, நாள் 07.07.2026)**

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | பதவி உயர்வில் பணியமர்த்தப்பட்ட பணியிடம் |
|---|---|---|
| 1 | பொறிஞர் கே.வானதி<br>கண்காணிப்புப் பொறியாளர்,<br>(கொள்முதல், தர நிர்ணயம் மற்றும் சாலை பாதுகாப்பு),<br>தேசிய நெடுஞ்சாலை,<br>தலைமைப் பொறியாளர் அலுவலகம்,<br>சென்னை | தலைமைப் பொறியாளர்,<br>தேசிய நெடுஞ்சாலை,<br>சென்னை |

## வாழ்த்துகிறோம்

1. **பொறிஞர் இ.முருகேசன்,** கண்காணிப்புப் பொறியாளர், திருநெல்வேலி
2. **பொறிஞர் சி.என்.நாகராஜன்,** இணை இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) முதன்மை இயக்குநர் அலுவலகம், சென்னை
3. **பொறிஞர் பி.தனசீலன்,** கோட்டப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, செங்கல்பட்டு
4. **பொறிஞர் எஸ்.சேதுராஜன்,** துணை கண்காணிப்புப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, மதுரை
5. **பொறிஞர் கே.கே.நாகராஜன்,** கோட்டப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, கள்ளக்குறிச்சி
6. **பொறிஞர் ஆர்.தேவகி,** கோட்டப் பொறியாளர், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம், சேலம்
7. **பொறிஞர் ஆர்.தமிலழகன்,** கோட்டப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, புதுகோட்டை
8. **பொறிஞர் ஆர்.மீராபாய்,** உதவிக் கோட்டப் பொறியாளர், (தொழில்நுட்பம்) முதன்மை இயக்குநர் அலுவலகம், சென்னை
9. **பொறிஞர் வி.செந்தில்குமார்,** உதவிக் கோட்டப் பொறியாளர், சென்னை - கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டம், கடலூர்
10. **பொறிஞர் வி.ஜெயராமன்,** உதவிக் கோட்டப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, திருவெறும்பூர்
11. **பொறிஞர் இ.கௌசல்யா,** உதவிக் கோட்டப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, சென்னிமலை

ஆகியோர் 30.06.2026 அன்று அரசுப் பணியினை நிறைவுச் செய்தனர்.
அவர்கள் நலன்கள் பலப் பெற்று பல்லாண்டு வாழ்க எனச் சங்கம் வாழ்த்துகிறது.

Copy of:

## ABSTRACT

Public Services - Disciplinary cases – Fixing up . time line for framing of charges under rule 17(b) of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, 1955 in respect of the Government Servants who are placed under suspension – Modifications of certain time limits for finalization of Disciplinary Proceedings – Compendium of Instructions – Issued.

---

## HUMAN RESOURCES MANAGEMENT (N-2) DEPARTMENT

**G.O. (Ms) No.34**

**Dated: 17.06.2026**
பராபவ ஆண்டு, ஆனி – 03,
திருவள்ளுவர் ஆண்டு - 2057.

**Read:**

1. Government Letter(Ms.) No.1118/Per-N/1987, Personnel and Administrative Reforms(Per-N) Department, dated 22.12.1987.
2. Government Letter No.47685A/N/1994-10, Personnel and Administrative Reforms(N) Department, dated 05.01.1996.
3. G.O.(Ms.) No.40, Personnel and Administrative Reforms(N) Department, dated 30.01.1996.
4. Government Letter No.13519/N/2015-1, Personnel and Administrative Reforms(N) Department, dated 23.07.2015.
5. Government Letter(Ms.) No.43/N/2015-3, Personnel and Administrative Reforms(N) Department, dated 26.04.2016.
6. G.O.(Ms.) No.66, Human Resources Management(N) Department, dated 06.07.2022.
7. G.O.(Ms.) No.81, Human Resources Management(N) Department, dated 04.08.2022.
8. Government Letter(Ms.) No.66/N/2024-1, Human Resources Management(N) Department, dated 23.07.2024.
9. W.P. Nos.923, 1213 & 1214 of 2026, W.P Nos.8357 & 8986 of 2024 & W.P. No.37562 of 2025 and W.M.P Nos.1413, 1414 of 2026, WMP Nos.9306, 9307, 9309, 10009, 10010 of 2024 and 42020 of 2025 filed by Thiru. M.Senthil Kumar & others on the file of Hon'ble High Court of Madras, Order, dated 10.02.2026.

-----

**ORDER:**

1. In the Government letter first read above, time limits were prescribed for conducting inquiries by the appropriate investigating authorities / inquiries by the Tribunal for Disciplinary Proceedings and for finalizing the disciplinary cases from each and every stage of the disciplinary proceedings.

(P.T.O)

2. In the Government letter second read above, the Government have issued instructions regarding necessity of suspension arising out of criminal cases (Trap and arrest cases).

3. In the Government Order third read above, instructions were issued to follow the time limit prescribed for finalisation of disciplinary proceedings and also to review the suspension cases periodically at the appropriate level in order to examine whether the suspension could be revoked for reinstatement into service pending disciplinary proceedings or it could be continued.

4. In the Government letter fourth read above, based on the directions of the Hon'ble Supreme Court of India in Ajay Kumar Choudhary Vs Union of India through its Secretary and Another in Civil Appeal No.1912 of 2015 (Arising out of SLP (C) No.31761 of 2013) dated 16.02.2015, the Departments of the Secretariat and Heads of Departments were requested to follow the directions ordered by the Hon'ble Supreme Court of India on the limitations in the period of suspension in letter and spirit as follows:-

(i) The currency of a suspension order should not extend beyond three months if within this period the Memorandum of Charges / Chargesheet is not served on the delinquent officer / employee;

(ii) If the Memorandum of Charges / Chargesheet is served a reasoned order must be passed for the extension of the suspension.

5. In the Government letter fifth read above, the Government have issued clarification "that the instructions issued already in the Government letter fourth read above, to the effect that the time limit of three months on suspension cases specified therein, are applicable *only to the suspension cases arising out of departmental disciplinary inquiries pertaining to non-vigilance and / or any non-criminal cases*, in view of the admitted fact that the gravity of the Vigilance / Criminal Cases is alarmingly more, than that of the seriousness of the non-vigilance / non-criminal cases in which allegation of corruption is not dealt with and it is also clarified that in the event of conviction in criminal case and / or grave corruption charges proved in any case, the competent authority may, by discretion, tend to impose any of the major penalties (dismissal / removal) against those accused officers concerned.

6. In the Government Order sixth read above, based on the directions and principles made by the Hon'ble High Court, the Government have issued the guidelines with regard to initiation of simultaneous departmental disciplinary action against the Government Servants for the same set of charges as in the Criminal Cases connected with discharge of their official duty (including Trap and Arrest Case) and to finalize the Simultaneous Disciplinary Action as per the guidelines issued at para 9(14) of the above said Government Order in order to avoid prolonged suspension of the Accused Officers till the outcome of criminal case and also to curtail the unnecessary expenditure to the State Exchequer by way of paying subsistence allowance without extracting work from them.

7. In the Government Order seventh read above, the Government have issued the guidelines reiterating the time limit for processing the disciplinary proceedings.

8. In the Government letter eighth read above, the Government have issued consolidated instructions to avoid defects in handling the disciplinary cases.

9. The Hon'ble High Court of Madras in its order, dated 10.02.2026 in W.P. Nos.923, 1213 & 1214 of 2026, W.P Nos.8357 & 8986 of 2024 & W.P. No.37562 of 2025 filed by Thiru. M.Senthil Kumar & others, has directed to file a report with regard to the stage-wise time line, viz., suspension to issuance of charge memo, initiation of enquiry, conduct and conclusion of enquiry, filing of enquiry report and passing of final orders concluding the departmental proceedings in terms with the procedure contemplated under rule 17(a) and 17(b) of the Government Servants (Discipline and Appeal) Rules.

10. The Government have examined the issue based on the above said orders of the Hon'ble High Court of Madras along with the instructions in force. As per the existing instructions, pending suspension cases have to be reviewed periodically by the authorities concerned as to whether the suspension needs to be continued or revoked, taking into consideration of the facts and circumstances of the case.

11. In this regard, in Government letter No.1437/N2/2025-1, Human Resources Management(N) Department, dated 26.04.2025, the time limits fixed for completion of Regular case, i.e. both trap and non-trap cases, by the Directorate of Vigilance and Anti-Corruption are as follows:-

| Sl. No. | Nature of work | Trap | Misappropriation & Criminal Misconduct | Disproportionate Assets |
|---|---|---|---|---|
| 1. | Time limit for submission of Draft Final Report | 3 months from the date of Registration | 9 months from the date of Registration | 12 months from the date of Registration |
| 2. | Time limit for processing in Directorate of Vigilance and Anti-Corruption Headquarters | 1 month | 1 month | 1 month |
| 3. | Time limit for according sanction of prosecution by the Competent Authority | 3+1 months | 3+1 months | 3+1 months |
| 4. | Time limit for laying charge sheet before the Court after sanction of prosecution. | 1 month | 1 month | 1 month |

a) As such, after the completion of the above time limit for filing charge sheets in such cases, charges shall be framed in simultaneous departmental action within a period of 3 months as instructed in the Government Order sixth read above.

(P.T.O)

b) In respect of non-trap criminal cases, if charge sheets could not be filed even after the completion of the above said time limit, then the competent authorities concerned shall review such cases as per the orders issued in G.O.(Ms.) No.30, Personnel and Administrative Reforms(N) Department, dated 23.02.2012 and take a decision on merits, whether to continue the suspension of those placed under suspension and pass appropriate orders.

c) In respect of criminal cases i.e. trap and arrest cases, the Government servants have to be placed under continued suspension till the finalisation of such criminal case or simultaneous disciplinary cases. The Suspension Review Committee while reviewing such cases, shall consider the instructions issued in Government letters second and fifth read above.

The above said time limits shall continue to be in force.

12. In the Government Order seventh read above, among others the following time limits has been prescribed in respect of the following stages of the departmental disciplinary proceedings:-

| | | |
|---|---|---|
| 12(iii) | For appointment of enquiry officer wherever necessary after the receipt of the explanation. | 7 days |
| (v) | For the Disciplinary Authority to take a decision after the receipt of Inquiry Officer's report | 10 days |

The Government after careful consideration, has decided to partially modify the above said time lines as follows:-

| | | |
|---|---|---|
| 12(iii) | For appointment of enquiry officer wherever necessary after the receipt of the explanation. | 15 days |
| (v) | For the Disciplinary Authority to take a decision, after the receipt of the Inquiry Officer's report.<br>(i) Non-Vigilance Cases<br>(ii) Vigilance Cases<br>(2 months for scrutiny by the DVAC + 20 days*) | <br><br>20 days<br>80 days* |

13. In continuation of guidelines issued in the Government Order seventh read above, the Government also orders that in respect of Government Servants who are placed under suspension due to contemplation of departmental disciplinary action in non-vigilance cases, charges shall be framed within three months from the date of placing under suspension.

14. Accordingly, the Government hereby directs that the timeline for processing the disciplinary proceedings so as to ensure that there is no unwarranted delay in finalizing them are as follows:-

| | | |
|---|---|---|
| (i) | To complete the investigation by Directorate of Vigilance and Anti-Corruption and to send a report to Government through Vigilance Commission. | One year |
| (ii) | To complete the enquiry by the Tribunal and to send its findings to the Department of Secretariat. | One year |
| (iii) | To pass final orders by the Government / Heads of Department on receipt of the report of the Tribunal. | Four months |

Time limits for crossing every stage of the departmental disciplinary proceedings:-

| | | |
|---|---|---|
| (i) | a) For calling for explanation under Rule 17(a) of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules or for framing of charges under Rule 17(b) of the said rules after the lapse comes to notice.<br>b) For calling for explanation under Rule 3(a) of the Tamil Nadu Police Subordinate Services (Discipline and Appeal) Rules,1955 or framing of charges under Rule 3(b) of the said rules after the lapse comes to the notice.<br>(The choice of the rule under which the disciplinary proceedings should be initiated is very important and the Disciplinary Authorities are expected to take a decision by considering the nature of lapses committed.) | 15 days |
| (ii) | For the delinquent officer to peruse the records and to submit his written explanation. | 30 days |
| (iii) | **For appointment of Inquiry Officer wherever necessary after the receipt of the explanation.** | **15 days** |
| (iv) | For the Inquiry Officer to complete enquiry and submit the enquiry report. | 30 days |
| (v) | **For the Disciplinary Authority to take a decision, after the receipt of the Inquiry Officer's Report.**<br>**(i) Non-Vigilance Cases**<br>**(ii) Vigilance Cases**<br>**(2 months for scrutiny by the DVAC + 20 days*)** | **20 days**<br>**80 days*** |
| (vi) | For obtaining the further representation of the delinquent officer on the report of the Inquiry Officer. | 15 days |
| (vii) | For obtaining the views of Tamil Nadu Public Service Commission, whenever it is consulted. | 30 days |

(P.T.O)

| | | |
|---|---|---|
| (viii) | For issue of final orders on the departmental disciplinary proceedings:- | |
| | (a) By Disciplinary Authority other than Government. | 7 days |
| | (b) By Department of Secretariat which have to consult other Departments and obtain orders in circulation. | 30 days |

15. All the disciplinary authorities shall follow the guidelines and time limits prescribed in paras 11,13 and 14 above, strictly, without any deviation, failing which will entail severe action against the officials responsible for their lapses.

16. All the Departments of Secretariat and Heads of Department are directed to issue suitable instructions to all the authorities concerned under their control, in this regard.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**M. SAI KUMAR**
**CHIEF SECRETARY TO GOVERNMENT**

To
All the Additional Chief Secretaries / Principal Secretaries / Secretaries to Government, Secretariat, Chennai – 600 009.
All Heads of Department, including District Judges and District Collectors.
The Secretary, Tamil Nadu Public Service Commission, Chennai – 600 003.
The Registrar, Hon'ble High Court, Chennai – 600 104.
The Director, Directorate of Vigilance and Anti-Corruption, Chennai – 600 016.
The Commissioner for Disciplinary Proceedings, (Chennai / Coimbatore / Madurai /Tiruchirappalli / Tirunelveli / Nagercoil)
The Human Resources Management (Inspection I, II and III) Department, Secretariat, Chennai – 600 009.

**Copy to:**
The Personal Assistant to Office of the Minister (Human Resources Management), Chennai – 600 009.
The Principal Private Secretary to Chief Secretary to Government, Chennai – 600 009.
The Additional Chief Secretary / Vigilance Commissioner and Commissioner for Administrative Reforms, Secretariat, Chennai-600 009.
All the Departments of Secretariat, ((O.P. Sections) with a request to communicate the copy of the order to all sections in their departments).
The Human Resources Management (L1/L2/L3) Department, Chennai – 600009. (5 copies each)
The Human Resources Management (AR) Department, Chennai – 600009.
The Vigilance Commission, Secretariat, Chennai – 600 009. (10 copies)
The Private Secretary to Principal Secretary to Government, Human Resources Management Department, Chennai – 600 009.
Stock File / Spare Copies. (C. No.133/N2/2026)

**//FORWARDED BY ORDER//**

17/6/2026
**SECTION OFFICER**
17/6/2026

# செயற்குழு உறுப்பினர் பொறிஞர் ஜாகிர் உசேன் நினைவேந்தல்

நாம் ஒரு சிலரை பார்த்தால், பேசினால், நினைத்தால், ஒவ்வொரு விதமான உணர்ச்சிகள், நம்மை அறியாமல் நம்முள் வெளிப்படும்.

ஒரு சிலரை நினைத்தால் சிரிப்பு வரும், ஒரு சிலரை பார்த்தால் கோபம் வரும், ஒரு சிலரை பார்த்தால் பணிவு வரும், ஒரு சிலரை பார்க்கும்போது பாசம் வரும். மேலும் ,அவர்களின் குணாதிசயங்களின் வெளிப்பாடுகள், அவர்களை சுற்றி இருப்பவர்களை சூழ்ந்து கொண்டிருக்கும்.

நெடுஞ்சாலைத் துறையில் பணிபுரியும் பொறியாளர்கள், மிகவும் பரபரப்பான சூழலில், வெடுக்கென பேசும் தன்மையுடன், ஒருவரோடு ஒருவர் பாசத்தோடு, நேசத்தோடு அன்பை பரிமாறிக் கொள்ளும் சூழல் இல்லாமல் சுழன்று கொண்டிருக்கிறோம்.

அண்மையில் நடைபெற்ற தமிழ்நாடு நெடுஞ்சாலை பொறியாளர் சங்க தேர்தலில், செயற்குழு உறுப்பினராக போட்டியிட்டு, பெருவாரியான வாக்குகள் பெற்று, வெற்றி பெற்ற ஜாகிர் உசேன் உதவிக்கோட்ட பொறியாளர் அவர்கள், இன்று நம்மிடம் இல்லை என்ற செய்தி மிகுந்த வருத்தத்தையும், துக்கத்தையும் வரவழைக்கிறது.

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் உற்றார், சுற்றார், நண்பர்கள், தெரிந்தவர்கள் என எத்தனையோ இழப்புகளை, ஒவ்வொரு காலகட்டத்திலும், நாம் சந்தித்து வந்து கொண்டிருக்கிறோம்.

இந்த நிலையில் ஜாகிர் உசேன் இழப்பு குறித்த செய்தி அறிந்தவுடன், நம்மை அறியாமல் அவரின் இழப்பை ஈடு செய்ய முடியாத நிலையில் ஒரு கணம் தத்தளித்து நின்றோம்.

ஜாகீர் உசேன் என்ற பெயரை கேட்டவுடன், அவரின் புன்சிரிப்பும், அன்பு கலந்த பேச்சும், அப்படியே கண்முன் நிற்கிறது.

பரபரப்பு மிகுந்த நெடுஞ்சாலை துறையில் இப்படி ஒரு மனிதரை மீண்டும் எப்போது காண்போம் என்ற ஏக்கம் நம்முள் எழுகிறது.

இவரின் அன்பான பேச்சும், அளவான பேச்சும், புன்னகை கலந்த முகமும், யாரையும் புண்படுத்தாத நெஞ்சமும், உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசும் தன்மையற்றவருமான ஜாகிர் உசேன் என்றென்றும் நம் உள்ளத்தில் நிலைத்து நிற்பார்.

என்னதான் முயற்சி செய்தாலும், நம்மால் அவரைப் போல அன்பாகவும், புன்சிரிப்புடனும், இருக்க முடியவில்லை என்ற ஏக்கப் பெருமூச்சு எல்லோரிடமும் இருப்பதை காண்கிறோம்.

ஆனால், அவர் பிறவியிலேயே அப்படி பழக்கப்பட்டு இருக்கிறார். அதை விளக்கப்படுத்தி இருக்கிறார். அதை அவர் நடைமுறைப்படுத்தி வாழ்ந்து இருக்கிறார்.

அதனால் தான், அவரின் சிரிப்பை, அன்பை, அவரின் பேச்சை, நம்மால் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியவில்லை.

ஜாகீர் உசேன், உடன் ஒருநாள் பழகி இருந்தாலும், அந்த புன்சிரிப்பையும், அவரின் அன்பான பேச்சையும், ஒருவராலும் மறக்க முடியாது. அத்தகைய உள்ளம் கொண்ட அன்பர், என்றென்றும் நமது நெஞ்சத்தில் நீடித்து வாழ்வார். அவரின் நினைவுகளோடு நாமும் தொடர்ந்து பயணிப்போம்.

**- பொறிஞர் ப நரசிம்மன்,**

உதவி கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை.



# காான்கிரீட்- CURING

**பொறிஞர் பாபு சந்திரசேகர், பி.இ., எப்.ஐ.இ.,**
சிறப்பு தலைமைப் பொறியாளர் (ஓய்வு),
மாம்பழப்பட்டு, விழுப்புரம் வட்டம்

கான்கிரீட் தளங்களின் மீதும் கட்டி முடித்த சுவர்களின் மீதும் தண்ணீர் சொறிவது அவசியமாகும். இதற்கு ஆங்கிலத்தில் உரசலைப என்று பெயர். ஊரசலைப என்ற வார்த்தைக்கு தமிழில் குணப்படுத்துதல் என மொழி பெயர்க்கலாம்.

**வேதியல் வினை**

செங்கற்களை இணைத்துச் சுவராக்குவதற்குச் சாந்து (mortar) வேண்டும். சுவரின் மீது பூசுவதற்கும் (plastering) சாந்து வேண்டும். இந்த சாந்து சிமெண்டும் மணலும் கலந்து உருவாகிறது. தளங்களும், உத்திரங்களும், தூண்களும் கான்கிரீட்டால் உருவாகின்றன. கான்கிரீட்டில் சிமெண்டும் மணலும், கருங்கல் ஜல்லியும் கலந்திருக்கின்றன. சாந்திலும் கான்கிரீட்டிலும் உள்ள இன்னொரு முக்கியமான இடு பொருள் தண்ணீர். இந்த நீர் ஆவியானதும் ஏற்கனவே நீர் இருந்த இடங்களில் வெற்றிடம் உருவாகும். கான்கிரீட் தளங்களின் மீதும் சுவரின் மீதும் புறத்தில் தொடர்ந்து நீரைச் சொரிவதன் மூலம் அகத்தில் ஒரு வேதியியல் வினை நடக்கும். சாந்திற்குள்ளும் கான்கிரீட்டிற்குள்ளும் புகும் நீரானது சிமெண்ட்டில் உள்ள கால்சியம் சிலிகேட் எனும் வேதிப் பொருளுடன் சேரும். விளைவாக கரிப்பொருள்,கந்தகம், ஹைட்ரஜன் ஆகிய தனிமங்களின் கூட்டில் ஒரு பசை உருவாகும். இந்தப் பசை ஏற்கெனவே ஆவியான நீர் ஏற்படுத்தியிருக்கும் வெற்றிடங்களை நிரப்பும். இந்தப் பசை நாளடைவில் கட்டியாகும். இது கான்கிரீட்டையும் சாந்தையும் வலுவாக்கும். அதற்கு நீடித்த ஆயுளையும் வழங்கும். இந்த வினை முறையாக நடக்காவிட்டால் வெற்றிடங்கள் முழுமையாக நிரம்பாது. அந்தச் சாந்தும் கான்கிரீட்டும் குறைபட்டதாகவே இருக்கும். பிற்பாடு ஒருக்கிலும் குணப்படுத்த முடியாத நோய் அதன்மீது கவியும். பலங் குறையும் விரிசல்கள் நேரும். காற்று உள்புகும். உள்புகுந்த காற்றிலுள்ள ஆக்சிஜன் இரும்புக்கம்பியுடன் நடத்தும் வேதியியல் வினையால் ஊடுகம்பிகளில் துருவேறும். துருப்பிடித்த கம்பி பருக்கும். அதைச் சுற்றிப் பிடித்திருக்கிற கான்கிரீட்டில் விரிசல் விழவும் உதிர்ந்து கொட்டவும் ஏதுவாகும். கட்டுமானத்தின் ஆயுளும் குறையும். ஆகவே "கியூரிங்" முறையாக நடந்தால் மட்டுமே கட்டுமானத்திற்கு நோயற்ற வாழ்வு அமையும்.

**செங்கல்லை நனைத்தல்**

சுவர்களுக்குப் பயன்படுத்தப்போகும் செங்கற்களைக் குளிரக் குளிர நனைக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் இந்தச் செங்கற்களுக்கு இடையில் சாந்துக் கலவையைப் பரத்துகிறபோது, கலவையில் உள்ள நீரைச் செங்கற்கள் கணிசமாக உறிஞ்சி விடும். சாந்துக்கலவை முதற்கட்டமாக இறுகுவதற்கு குறிப்பிட்ட கால அவகாசம் வேண்டும். அதற்குப் பிறகுதான் சுவரின்மீது நீரைச் சொரிய முடியும். உலர்ந்த செங்கற்கள் கலவையின் நீரை உறிஞ்சிவிட்டால், சாந்து இறுகுவதற்கு முன்னதாகவே கலவையில் வெற்றிடங்கள் தோன்றிவிடும். இது கலவையில் விரிசல் தோன்றக் காரணமாகிவிடும்.

**நீரின் அளவு**

கான்கிரீட்டைப் பொறுத்தமட்டில் அதில் தண்ணீர் சரியான அளவில் சேர்க்கப்பட வேண்டும். தண்ணீர் குறைவாக இருந்தால் மேலே குறிப்பிட்ட வேதியியில் வினை நிகழும் சூழல் உருவாகாது. தண்ணீர் கூடுதலாகச் சேர்க்கப்பட்டால் அந்தத் தண்ணீரெல்லாம் ஆவியாகும்போது வெற்றிடங்கள் அதிகமாகும். நீராற்று காலத்தில் உருவாகிற பசையால் எல்லா வெற்றிடங்களையும் நிரப்ப முடியாது. விளைவு முறையான நீராற்று நடந்தாலும், உள்ளுக்குள் வெற்றிடங்கள் நிரம்பிய, அதனால் பலமும் ஆயுளும் குறைந்த கான்கிரீட் தான் கிடைக்கும். ஆக கான்கிரீட் கலவையில் தண்ணீர் குறைந்தாலும் குற்றம், கூடினாலும் குற்றம்.

**நீராற்றுக் காலம்**

சுவர்களைக் கட்டிய பிறகும். பிற்பாடு அவற்றைப் பூசிய பிறகும் குறைந்த பட்சம் ஒரு வார காலத்திற்கு நனைக்க வேண்டும். கான்கிரீட் தூண்களை ஒரு வார காலத்திற்கும், தளங்களை இரு வார காலத்திற்கும் நனைக்க வேண்டும். நீராற்று காலத்தில் கான்கிரீட் பரப்பு உலர்ந்து போக அனுமதிக்கலாகாது.

**எம்-சாண்ட்**

மேட்டூர் அணை 1924ல் கட்டப்பட்டது. இவ்வணையின் கட்டுமானத்திற்கு எம்-சாண்ட் பயன்படுத்தி கட்டத்தான் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன. தமிழகத்தில் நெடுங்காலமாக ஆற்று மணல்தான் கட்டுமானப்பணிகளுக்கு பயண்படுத்தப்பட்டு வந்தது. 1980ம் ஆண்டு வரை ஆற்று மணல் சகாயமாக கிடைத்தது. 1991ம் ஆண்டுக்குப்பின் ஏற்பட்ட LPG (தாராள மயமாக்கல், தனியார்மயம், உலகமயமாக்கல்) மாற்றத்தால் பொருளாதார வளர்ச்சி வேகமாக ஏற்பட்டது. ஆற்று மணல் தேவை அதிகரிப்பால் மணல் விலை உயர்ந்தது. சுற்றுச்சூழல் பாதிப்பு அதிகரித்தது. ஆகவே தான் எம்-சான்டை பயன்படுத்தி கட்டுமானப்பணிகளை செய்து வருகிறோம்.

**எம்-சான்டின் பயன்பாடு மூன்று வகைபடும்.**

1. கான்கிரீட் கலவை
2. சுவர்களை கட்ட சாந்துக்கலவை
3. பூச்சு வேலைக்கான சாந்துக்கலவை

இம்மூன்றுக்கும் இடையில் பண்புகளில் சிறிய வேறுபாடு இருக்கும்.

**எம்-சாண்ட் தயாரிக்கும் முறை**

மலைப்பிஞ்சுகள் சிறு பாறைகளாகவும், அடுத்து இவை 40 மில்லி மீட்டர் (1-1/2 அங்குலம்) ஜல்லிகளாகவும், தொடர்ந்து 20 மி.மீ. (3.4”) ஜல்லிகளாகவும் உடைக்கப்படும். இந்த ஜல்லிகள் நிமிர் சுழல் தண்டு (vertical shaft impactor VSI) எனும் இயந்திரத்தில் பொடியாக்கப்படும். கான்கிரீட்டில் பயணப்படுத்தப்படும் எம்-சாண்ட் அளவு 4.75 மி.மீ.-ஐவிடக் குறைவாகவும் 150 மைக்ரானைவிட அதிகமாகவும் இருக்க வேண்டும். ஒரு மீட்டரில் ஆயிரத்தில் ஒரு பாகம் ஒரு மில்லி மீட்டர். ஒரு மில்லி மீட்டரில் ஆயிரத்தில் ஒரு பாகம் ஒரு மைக்ரோ மீட்டர் அல்லது மைக்ரான், மேற்குறிப்பிட்ட அளவைகளில் எம்-சாண்ட் இருப்பதை தானியங்கி சல்லடைகள் (Sieves) உறுதி செய்யும். இவை நன்னீரால் கழுவப்பட்டு மீண்டும் ஒரு முறை சலிக்கப்படும்.

**நன்றி. திரு. மு. ராமநாதன், B.E., இந்து நாளிதழ்**



# கம்போடியா சில பல தகவல்கள்


**பொறிஞர் ப.நரசிம்மன், எம்.இ.,**
**முன்னாள் துணைத்தலைவர்,**
**தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்**




கம்போடியா எனும் நாடு தாய்லாந்து வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு இடையில் உள்ள ஒரு நாடு.

இந்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்டு இன்றுவரை அவர் வாரிசுகளால் ஆண்டு கொண்டிருக்கும் ஒரு நாடு.

சமூகம், பண்பாட்டு பின்னணியில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நாடு. காம்போஜம் என்று இந்தியர்களால் அழைக்கப்பட்டு, கம்பூச்சியா என்று அறியப்பட்ட நாடாகும். பின்னாளில் பிரான்ஸ், கம்போடியா என்ற பெயரில் அழைக்கப்பட்ட நாடாகும்.

பிரபஞ்சத்தின் மையப் பகுதியாக கருதப்படும் இந்த பகுதியில் உள்ள மலை ஹிந்துக்களின் மேருமலையாகும்.

இங்கு வாழும் இனத்தின் ஆரம்பம் இந்நாட்டின் நாக மன்னரின் உத்திர யானை இளவரசிக்கும், வெளிநாட்டிலிருந்து படகில் வந்த இந்தியர் ஒருவருக்கும் ஏற்பட்ட திருமணத்தின் மூலம் தான் உருவாகி இருக்கிறது.

கடல் கடந்த வணிகத்தில் சிறப்புற்று வாழ்ந்த நம் இந்தியர்களின் வீரத்தையும், வெற்றியையும் பறைசாற்றும் விதமாக கம்போடியா விளங்குகிறது.




பல்லவர் காலத்து அரசர்களுக்கும் கம்போடிய மன்னர்களுக்கும் பல்வேறு ஒற்றுமைகள் இருப்பதை அறிய முடிகிறது.

ஆழி சமஸ்கிருதம் கேமத் ஆகிய மொழிகளின் ஆதிக்கம் இங்கு உள்ளது. இந்நாட்டின் /பெனாம் பெண்ணில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் முதன் முதலாக ஜெயவர்மன் என்னும் அரசனின் பெயர் காணப்படுகிறது. இங்கு 900 கல்வெட்டுகள் உள்ளன

கம்போடியாவின் அங்கோர்வாட் டில் உள்ள அஷ்டபுஜ விஷ்ணு உருவம், காஞ்சிபுரத்து கோவிலின் அஷ்டபுஜ விஷ்ணு உருவத்தை ஒத்ததாக உள்ளதை அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.

கம்போடியா தற்போது தான் வளர்ச்சியை நோக்கிய பயணத்தை மேற்கொண்டுள்ளது.

ஏழ்மை வறுமை கொண்ட ஒரு பழமையான நாடாகும். ஆனால், இங்குள்ளவர்கள் உழைப்பையும் நேர்மையையும் ஒழுக்கத்தையும் கைவிடாமல் கடைபிடித்து கொண்டு வருபவர்கள் என்பதை பார்க்க முடிகிறது.

கம்போடியா பெண்கள், மஞ்சள் கலந்த வெண்மை நிறம் கொண்டு மலர்ச்சியான முகத்துடன் விளங்குகிறார்கள்.

கம்போடியா நாட்டின் பொருளாதாரம் நீர் வளத்தை நம்பி இருக்கிறது. நெல் விளையும் பூமியாக அங்கு காட்சி அளிக்கிறது.

அங்கூருக்கு தெற்கில் தோணலே சாங் எனும் ஒரு பெரிய ஏரி உள்ளது. இதற்கு குடிநீர் சமுத்திரம் என்று கம்போடியர்களால் குறிப்பிடப்படுகிறது.

இது ஏரி அல்ல, ஒரு பெரிய நீர்நிலை போல் காட்சியளிக்கிறது.

கம்போடியாவின் இன்றைய தலைநகர் /பெனாம் பெண். முந்தைய கால கம்போடியாவின் தலைநகர் அங்கூர்

கம்போடியாவின் அங்கோர்வாட்டில், கிபி 112-ம் சூரியவர்மன் அவர்களால் கட்டப்பட்ட சிவன் கோயில் உலக நினைவு சின்னமாக இன்றும் போற்றப்பட்டு வருகிறது.

தமிழக வணிகர்களின் நலம் காக்கும் அரசுகள் கம்போடியாவில் இருந்திருக் கின்றன.

பழைய தமிழ் இலக்கியங்களில் கம்புஜம் எனவும், அதன் பிறகு கெமர் எனவும், பெயர் மாறி கம்புஜியா என உருமாறியது.

வியட்நாம் படையெடுப்பு மூலம் போல் பாட் ஆட்சி முடிவுக்கு வந்த பின்னர், இந்த நாட்டுக்கு வைக்கப்பட்ட பெயர் கம்போடியா. இந்த நாட்டின் தலைநகர் /பெனாம் பெண்.




சியாம் ரீப் என்ற சிறிய அழகிய நகரம் கம்போடியாவின் மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாக திகழ்ந்து வருகிறது. இங்கு நூற்றுக்கும் மேற்பட்ட அழகிய , சிதிலமடைந்த கோயில்கள் அமைந்துள்ளன.

கம்போடியா நாட்டில் நடைபெறும் அப்சரா நடனம், பார்வையாளர்களை பரவசப்படுத்தும் விதமாக, சுற்றுலா பயணிகளுக்கு விருந்து படைக்கிறது.

ஒட்டுமொத்தமாக உழைக்கும் மக்கள் ஒன்று கூடி வாழும் நாடு கம்போடியா எனலாம்.



**பொறிஞர் வி.சமுத்திரக்கனி, கோட்டப் பொறியாளர், தரக்கட்டுப்பாடு, ஈரோடு** அவர்கள் பணிநிறைவு பாராட்டு விழா ஈரோட்டில் சிறப்பாக நடைபெற்றது



**பொறிஞர் எஸ்.சேதுராஜன், துணைக் கண்காணிப்புப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, மதுரை** அவர்களின் பணிநிறைவையொட்டி நமது சங்கத்தின் **பொருளாளர் சொ.தியாகராஜா** அவர்கள் நேரில் சென்று வாழ்த்தினார்



**பொறிஞர் வி.ஜெயராமன், உதவிக் கோட்டப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, திருவெறும்பூர்** அவர்களின் பணிநிறைவு பாராட்டு விழா திருச்சியில் சிறப்பாக நடைபெற்றது. நமது சங்கத்தின் **பொதுச் செயலாளர் பொறிஞர் ப.வீரமணி மற்றும் செயலாளர் ச.ஜோதிபாசு** ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தினர்

RNI No. 49572/90

**Registration No. TN/CC (S) DN/597/23-25**
**Licensed to post without prepayment under WPP No.TN/PMG/(CCR)WPP146 / 23 – 25**
**Date of Publication: First Week of Every Month**
**Posted at PathrikaChennel, Egmore, Chennai - 600 008**
**Posted between 7th - 13th Everymonth** **Despatch Date : 23.07.2026**




நெடுஞ்சாலைத்துறைக்கு முதன்மைச் செயலாளராகப் பொறுப்பேற்றுள்ள **திரு.சுன்சோங்கம் ஜடக் சிரு, இ.ஆ.ப.,** அவர்களை 24.06.2026 அன்று சங்க நிருவாகிகள் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.



**பொறிஞர் அ.மாரியப்பன், உதவிக் கோட்டப் பொறியாளர் (பணி நிறைவு)** அவர்களின் புதல்வியின் திருமணம் 02.07.2026 அன்று மதுரையில் சிறப்பாக நடைபெற்றது. நமது சங்கத்தின் மாநில நிருவாகிகள் கலந்து கொண்டு வாழ்த்தினர்

Published by: Er.A.Venkatachalam, M.E., Former President, ATNHE, on behalf of the Association of Tamilnadu Highways Engineers; 35V, Taluk Office Road, Saidapet, Chennai-600 015
Printed by: S.S.Graphics, 54/2, Mohammed Hussain Street, Royapettah, Chennai-600 014
Editor: Er.R.Deepak, M.E., Former General Secretary, ATNHE